கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 03.11.2023 அ.வ.எண். 736/2010 வா.சா.1 சந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்து எந்த க.ச.எண்ணில் அமைந்துள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் உத்தரவிற்காக விண்ணப்பித்தபோது என்ன ஆவணங்களை ஆதரவாக தாக்கல் செய்தேன் என்றால் கிரையப்பத்திரத்தின் நகலை தாக்கல் செய்தேன்.

2) யார் யார் சேர்ந்து பட்டா மாறுதல் கேட்டோம் என்றால் கே.என்.வடிவேலு, கே.என்.கோபால், என்.பாலசுப்பிரமணியன் மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து விண்ணப்பித்தோம்.

3) கிருஷ்ணசாமியின் வாரிசுகளிடம் எந்த அனுமதியும் பெறாமலும் அவர்களுக்கு தகவல் தெரிவிக்காமலும் பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்தோம் என்றால் தகவல் தெரிவித்தோம்.

4) கிருஷ்ணசாமியின் வாரிசுகளுக்கு கிராம நிர்வாக அலவலர் மூலமாக தகவல் சொல்லி பட்டா மாறுதல் செய்வதற்காக விண்ணப்பித்தது பற்றி தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) மூன்று நபர்கள் பெயர்களில் மட்டும் தான் பட்டா மாறுதல் கேட்டு விண்ணப்பித்தோம் என்றால் சரியல்ல. அனைவர் பெயரிலும் பட்டா மாறுதல் கேட்டோம்.

6) பட்டா மாறுதல் சம்பந்தமான விசாரணையில் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் விபரத்தை சொல்லி அந்த பட்டா மாறுதல் மனுவை விசாரிக்க வேண்டாம் என்று நான் சொல்லி அந்த மனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7) பட்டா மாறுதல் கேட்டு விண்ணப்பித்தபோது அவஎண்.470/2006 வழக்கு பற்றிய விபரத்தையும் சேர்த்து கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். பட்டா மாறுதல் குறித்த மனு குறித்தோ அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு குறித்தோ கிருஷ்ணசாமியின் வாரிசுகளுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

8) அவஎண்.470/2006 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தீர்ப்பின்படி கிருஷ்ணசாமிக்கு மாரியம்மாள் தான் மனைவி என்றால் அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

9) வா.சா.ஆ.1 ஆவணத்தை 12.05.2010 அன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நகல் எடுத்தேன் என்றால் சரிதான். அசல் ஆவணம் நாச்சிமுத்துவிடம் உள்ளது.

10) வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் உள்ள விபரங்கள் நகல் எடுத்து பார்த்தபோது தான் எனக்கு தெரியவந்தது என்றால் இல்லை. அதை பதிவு செய்யும்போதே அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

11) வழக்கின் அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக அவஎண்.350/2010 என்ற வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

12) அவஎண்.417/2010 என்ற வழக்கும் நிலுவையில் உள்ள விபரம் தெரியும் என்றால் தெரியும். அவஎண். 417/2010 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோப்பிற்கு மீண்டும் எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

13) அவஎண்.800/2008 என்ற வழக்கை எதற்காக தாக்கல் செய்தோம் என்றால் அங்கம்மாளின் வாரிசு கேட்டு அந்த வழக்கை தாக்கல் செய்தோம்.

<u>(5 ம்பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )</u>

(ஒப்பம்)/– சந்திரன்